Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 186/2015 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW12 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ரவி |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th September 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present.

முதல் விசாரணை :

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் நெகமம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது, நெகமம் காவல்நிலைய குற்ற எண்.245/2014 வழக்கின் முதற்கட்ட புலன் விசாரணை முடித்து மேல் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 14.08.2014 ம் தேதி 22.00 மணிக்கு இரவு ரோந்து செய்து கொண்டு, நெகமம் புதிய பேருந்து நிலையம் வந்தபோது, ராமு டீக்கடை முன்பு நின்றுக் கொண்டிருந்த நபர் எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்கையில் முதலில் முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளித்தவர் பின்னர் தன் பெயர் ரவி என்கிற ரவிக்குமார், த/பெ. கருப்பையா தேவர் என்று கூறியவரை சோதனை செய்ய அவரிடம் தனது லுங்கியில் பணத்தை சுருட்டி வைத்திருந்ததை பற்றி விசாரிக்கையில் அவர் 10.08.2014 ம் தேதி இரவு நெகமம் டாஸ்மாக் கடையில் திருடிய பணம் என்றும், மீதி பணத்தை மறைத்து வைத்திருப்பதாக கூறியவரை சாட்சிகள் பெருமாள் சாமி மற்றும் சக்திவேல் ஆகியோர்கள் முன்னிலையில் காரணம் கூறி 22.30 மணிக்கு கைது செய்தும், அவர் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை 22.45 மணி முதல் 23.45 மணி வரை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் நான் செலவு செய்தது போக என் பாக்கெட்டில் இருக்கும் பணத்தை தங்களிடம் ஆஜர்படுத்தி மற்றும் மரக்கட்டையையும், கடப்பாறையையும் நெகமம் - தாராபுரம் ரோடு லட்சுமி மெஸ் பின்புறம் நான் மறைத்து வைத்திருக்கும் பணத்தையும் கடப்பாறையும் எடுத்து ஆஜர் செய்கிறேன் என்ற அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.13** ஆகும்.

பின்னர் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 23.45 மணிக்கு எதிரி எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.4000/-ஐ கைப்பற்றுதல் மகஜரில் மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.14** ஆகும். பின்னர் 15.08.2014 ம் தேதி 00.15 மணிக்கு எதிரி அடையாளம் காட்டிய லட்சுமி மெஸ் வீட்டின் பின்பக்கம் உள்ள தேங்காய் மட்டை அடுக்கி வைக்கப்பட்ட இடத்திலிருந்து பணம் ரூ.316000/-ஐ வெள்ளை கலர் பிளாஸ்டிக் சாக்கு பை ஒன்றையும், 01.00 மணிக்கு அதே இடத்திலிருந்து சுமார் 89 செ.மீ நீளமுள்ள இரும்பு கடப்பாறை ஒன்றையும் தனித்தனியாக கைப்பற்றுதல் மகஜர்களில் கைப்பற்றினேன். அவைகள் முறையே **அ.சா.ஆ.15** மற்றும் **அ.சா.ஆ.16** ஆகும்.

பின்னர் பட்டியல் சாட்சிகள் 13 முதல் 16 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்கள்

மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து எதிரிக்கு திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அவைகள் முறையே **அ.சா.ஆ.17** முதல் **அ.சா.ஆ.19** ஆகும்.

பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் மற்றும் முதற்கட்ட புலன் விசாரணை செய்த சோமசுந்தரம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிக்கெதிராக மேற்படி சட்டப்பிரிவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi